بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 25/03/2022 அன்று *U.K* - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

# மஸீஹ் மவ்வூது தினம்

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் அருளுக்குரிய வாழ்வைக் குறித்து ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் எடுத்துரைத்த சில சம்பவங்களின் மனதைக் கவரும் குறிப்புகள்

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝١ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۝٢ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝٣ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۝٤ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ۝٥

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۝٦ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۝٧

இரு நாட்களுக்கு முன்பு மார்ச் 23 ஆம் தேதியாக இருந்தது. இந்த நாள், ஜமாஅத்தில் மஸீஹ் மவ்வூது தினமாக கொண்டாடப்படுகின்றது. இந்த நாளில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் முதல் பைஅத் வாங்கினார்கள். இந்த நாளில் கூட்டங்களும் நடத்தப்படுகின்றன. அவற்றில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வாதம், அன்னாருடைய வருகையின் அவசியம், அன்னாருடைய வருகை குறித்த முன்னறிவிப்புகள் மற்றும் அன்னாருடைய வாழ்வின் பல்வேறு அம்சங்கள் எடுத்துரைக்கப்படுகின்றன. **காலத்தின் அவசியத்திற்கேற்ப தன் வருகையின் முக்கியத்துவம் குறித்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் இவ்வாறு கூறுகிறார்கள்:** இக்காலத்தில் இறைவன் பெரும் அருள் செய்துள்ளான். தனது மார்க்கம் - அதாவது இஸ்லாமிய மார்க்கம் மற்றும் ஹஸ்ரத் நபீ கரீம் (ஸல்) ஆகியோருடைய உதவிக்காக தன்மானம் கொண்டு, உங்களிடையே பேசிக் கொண்டிருக்கும் ஒரு மனிதரை அனுப்பியுள்ளான். அவர் அந்த ஒளியின் பக்கம் மக்களை அழைக்க வேண்டும் என்பதற்காக அனுப்பப்பட்டுள்ளார்....... வலப்புறமும் இடப்புறமும் - எல்லா புறத்திலிருந்தும் இஸ்லாத்தை ஒழித்துக்கட்டும் கவலையில் அனைத்து சமுதாயங்களும் மூழ்கி இருப்பதை நீங்கள் பார்க்கிறீர்கள்........ இறைவனின் தன்மான உணர்வு பொங்கி எழவில்லை என்றால், اِنَّا لَهٗ لَحٰفِظُوْنَ 'நிச்சயமாக நானே இதை பாதுகாப்பேன்' என்ற அவனது வாக்குறுதியை இல்லாமலிருந்தால், இன்று உலகிலிருந்து இஸ்லாம் எடுக்கப்பட்டிருக்கும். அதன் பெயரும் அடையாளமும் கூட அழிந்திருக்கும். ஆனால் ஒருபோதும் அவ்வாறு நடப்பது சாத்தியமன்று! இறைவனுடைய மறைவான கரம் அதை பாதுகாத்து வருகின்றது.

அன்னார் தன்னுடைய வாதத்திற்கு பிறகு அல்லாஹ்வின் உதவி ஒத்தாசை எவ்வாறு தன்னுடன் உள்ளது என்பதை பற்றி கூறினார்கள். தற்போது நான், ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் எடுத்துரைத்த சில விஷயங்களை எடுத்துக் கூறுவேன். அவற்றை அன்னார் நேரடியாக கண்டுள்ளார்கள். அல்லது கேட்டுள்ளார்கள். இச்சம்பவங்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் உண்மையை எடுத்துக் கூறுகின்ற அதேவேளையில், நம்முடைய சீர்திருத்தத்தின்

பக்கமும், நமது ஈமானுடைய உறுதித்தன்மையின் பக்கமும் நமக்கு கவனமூட்டுகின்றன.

நபிமார்களின் எதிராளிகள் எப்போதும் நடந்து கொள்கின்ற முறை என்னவென்றால், நபிமார்கள் குறித்து அவர்கள் கூறி வந்தது என்னவென்றால், நபிமார்கள் எந்தவொரு அறிவு ஞானத்தின் விஷயத்தை எடுத்துரைத்தாலும் - இதை அவர்களுக்கு இன்னொருவர் கற்றுக்கொடுக்கிறார் என்றே கூறினர். எந்த அளவுக்கென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதும், நவூதுபில்லாஹ்! திருக்குர்ஆனைக் குறித்து ஆட்சேபனை செய்யப்பட்டது. **ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) கூறுகிறார்கள்:** ஹைதராபாத்தைச் சேர்ந்த மவ்லவி சிராஃக் அலீ சாஹிப் என்பவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு இக்கட்டுரைகளை எழுதி அனுப்பி வருகிறார். அவற்றை அன்னார் பராஹீனே அஹ்மதியாவில் வெளியிடுகிறார் என்றும் கூட எதிர்மறை கருத்துடைய செய்தித்தாள்கள் எழுதி வந்தன. மவ்லவி சிராஃக் அலீ சாஹிப் அவர்களுக்கு என்னவாயிற்று! ஏனென்றால், அவருக்கு உதித்த நல்ல நுட்பமான கருத்துக்களை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு எழுதி அனுப்பி வைத்தார். ஆனால் இங்குமங்குமுள்ள சாதாரண கருத்துக்களை தம்மிடத்தில் வைத்துக் கொண்டார்! அது ஏன்? முதல் விஷயம் என்னவென்றால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு கட்டுரையை எழுதி அனுப்பி வைக்க வேண்டிய அவசியம்தான் என்ன வந்தது அவருக்கு? அவ்வாறு அனுப்பியிருந்தாலும், சிறந்த பொருளை தன்னிடம் வைத்துக்கொண்டு சாதாரண பொருளை பிறருக்கு கொடுத்திருக்க வேண்டாமா என்ன!

**எதிரிகளின் கூச்சல் குறித்தும் எதிர்ப்பு குறித்தும் எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வாதம் செய்தபோது அக்காலத்தில் அன்னாருடைய நிலையும் அன்னாரை ஏற்றுக்கொண்டவர்களின் நிலையும் வெளிப்படையாக பார்க்கும்போது மிகவும் பலவீனமானதாக இருந்தது. மவ்லவிகள் பல்வேறு விதமாக மக்களை தூண்டி விட்டுக் கொண்டிருந்தனர்.

**இந்த எதிர்ப்புகளுக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் எதிர்நடவடிக்கை எவ்வாறு இருந்தது என்பதை குறித்து ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** நான் இவ்விஷயத்தை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடமிருந்து பலமுறை கேட்டுள்ளேன். 'மக்கள் ஏசிப்பேசும்போது, இவர்கள் தம்முடைய மறுமையை ஏன் வீணடிக்கிறார்கள் என்று வருத்தமாக இருக்கும். ஏசிப்பேசவில்லை என்றாலும் கஷ்டமாக இருக்கும். ஏனென்றால் எதிர்ப்பு இல்லாமல் ஜமாஅத்தின் முன்னேற்றம் உருவாகாது.' ஏசிப்பேசும்போது எதிர்ப்பின் காரணமாக ஜமாஅத்தின் தூதுச் செய்தி சென்றடைகிறது. 'ஏச்சுப் பேச்சிலும் நமக்கு இன்பம் கிடைக்கிறது. ஆகவே, ஆட்சேபனை அல்லது மக்களின் தீய சொற்களை கருத்தில் கொள்ளக்கூடாது' என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறிவந்தார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பஞ்சாபி பழமொழி ஒன்றை எடுத்துரைத்து வந்தார்கள். அது என்னவென்றால், "ஒட்டகம் எவ்வளவுதான் அழுது கொண்டிருந்தாலும் அதன் எஜமானர் அதை தடவிக் கொடுத்தவாறு அதன்மீது சுமைகளை ஏற்றி வைத்தே தீருவார்." மக்கள் என்ன சொன்னாலும் சரியே! நீங்கள் மென்மையுடனும் நேசத்துடனும் நடந்து வர வேண்டும் என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வறிவுரையை கூறி வந்தார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வாதம் செய்தபோது அன்னாரை ஏற்றுக்கொண்டவர்கள் சொற்ப நபர்களே ஆவர். ஆத்தமுடன் அன்னார் மோதியபோது மக்களிடையே ஒரு சோதனை வந்தது. லேக்ராமுடன் மோதியபோது அன்னாருக்கெதிராக இந்துக்களிடையே ஒரு உத்வேகம் உருவானது. மவ்லவி முஹம்மது ஹுசைன் பட்டாலவி அவர்களின் ஃபத்வாக்களின் போதும் டாக்டர் அப்துல் ஹக்கீம் அவர்கள் முர்தத் ஆன போதும் ஜமாஅத்தில் சோதனைகள் வந்தன. ஆனால் இறைவன் இந்த அனைத்து குழப்பங்களையும் ஒழிப்பதற்கான வழி வகைகளை உருவாக்கியிருந்தான். குழப்பங்கள் ஜமாஅத்தை நாசமாக்குவதற்கு பதிலாக அதன் முன்னேற்றத்திற்கும் கண்ணியத்திற்கும் காரணிகளாக அமைந்தன.

**எதிர்ப்புகள் தொடர்பாக ஒரு சொற்பொழிவில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறினார்கள்:** ஒரு மனிதர் எதிர்ப்பான விஷயங்களை கேட்கும்போது, அப்படியா! இவர்கள் மோசமான மக்களா? கொஞ்சம் நானும் சென்று பார்க்கிறேன் என்று அவர் அவ்விஷயத்தை கிளற ஆரம்பிக்கிறார். அவர் வந்து காணும்போது வியப்படைந்து விடுகிறார். அவர்கள் கூறிய விஷயங்கள் முற்றிலும் வேறொன்றாக இருந்தன. இவர்கள் கூறுகின்ற விஷயங்கள் முற்றிலும் வேறொன்றாக இருக்கின்றன! இவ்வாறு அவர் நேர்வழியை ஒப்புக்கொள்கிறார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சபைக்கு ஒருமுறை ஒரு நபர் ராம்பூரில் இருந்து வருகை தந்திருந்தார். உங்களிடம் பைஅத் செய்வதற்கு மவ்லவி சனாவுல்லாஹ் சாஹிப் தூண்டுகோலாக இருந்தார் என்று அவர் கூறினார். நான் அவருடைய நூல்களில் உங்களுக்கெதிரான எதிர்ப்புகளை படித்துள்ளேன். சான்றுகளை பார்ப்பதற்காக நான் உங்களுடைய நூல்களையும் படித்தேன். ஹஸ்ரத் ரசூலே கரீம் (ஸல்) அவர்களுடைய கண்ணியம், மகத்துவம் ஆகியவை குறித்து நீங்கள் எழுதியவை அவர்களுடைய உள்ளங்களில் கூட கிடையாதே என்பதை நான் அறிந்து கொண்டேன் என்று அவர் கூறினார்.

**நபிமார்கள் ஏன் கடினம் காட்டுகிறார்கள்? இதைக் குறித்து ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** நபிமார்கள் காட்டும் கடினம், தனக்காக அவர்கள் காட்டுவது கிடையாது. மாறாக அல்லாஹ்வுடைய அந்தஸ்தை நிலை பெறச் செய்வதற்காக கடினத்தையும் தன்மானத்தையும் அவர்கள் வெளிப்படுத்துகின்றனர். தமக்காக அவர்கள் முற்றிலும் பணிவை கடைபிடிக்கின்றனர். ஒரு முறை லாகூரின் ஒரு வீதியில் யாரோ ஒருவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை தள்ளிவிட்டார். அன்னார் கீழே விழுந்து விட்டார்கள். அதை கண்ட அன்னாருடைய தோழர்கள் ஆவேசம் கொண்டு அவரை அடிக்க சென்றனர். கொஞ்சம் தாமதித்திருந்தாலும் அவரை அடித்திருப்பர். ஆனால் அன்னார் அவர்களோ, அந்த நபர் உத்வேகத்தில் உண்மைக்கு ஒத்தாசை செய்வதற்காக இவ்வாறு செய்துள்ளார்; அவரை ஒன்றும் செய்ய வேண்டாம் என்று கூறினார்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) கூறுகிறார்கள்:** நம்முடைய காலத்தில் இறைவன் அனைத்து கண்ணியங்களையும் நம்முடனே இணைத்துள்ளான். இப்போது கண்ணியம் பெறக்கூடியவர்கள், ஒன்று நம்மை பின்பற்றுபவராக இருக்கவேண்டும். அல்லது நம்மை எதிர்க்கக் கூடியவராக இருக்க வேண்டும். மவ்லவி சனாவுல்லாஹ் சாஹிபை பாருங்கள்! அவர் பெரிய மவ்லவி ஒன்றும் கிடையாது. அவரைப் போன்ற ஆயிரக்கணக்கான மவ்லவிகள் பஞ்சாப் மற்றும் இந்தியாவில் இருக்கிறார்கள். அவருக்கு ஏதேனும் கௌரவம் கிடைத்துள்ளது என்றால், அது நம்மை எதிர்த்ததன் காரணமாகவே கிடைத்துள்ளது.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறுகிறார்கள்:* ஆக! இன்றும் கூட நாம் இதையே பார்க்கிறோம். மவ்லவிகளின் வாழ்வாதாரம் நல்ல விதமாக நடக்கிறது

என்றால் அல்லது அவர்களுக்கு ஏதேனும் நாற்காலி கிடைத்துள்ளது என்றால் அஹ்மதியத்தின் எதிர்ப்பின் காரணமாகவே கிடைத்துள்ளது. இப்பொழுது சில அரசியல்வாதிகளும் கூட அஹ்மதியத்தின் எதிர்ப்பின் காரணமாக தன்னுடைய அரசியலை ஜொலிக்க வைக்க முயற்சி செய்கின்றனர்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கெதிராகவும் சூழ்ச்சிகளும் செய்யப்பட்டன. கொலை வழக்குகள் கூட தொடரப்பட்டன. ஒரு கொலை வழக்கில் மவ்லவி முஹம்மது ஹுசைன் பட்டாலவி அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் சாட்சி கூறுவதற்காக வந்தார். நீதிமன்றத்தில் மவ்லவி முஹம்மது ஹுசைன் பட்டாலவி அவர்களுக்கு பெரும் இழிவை சந்திக்க நேர்ந்தது.

கிறிஸ்தவர்களுடன் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஒரு விவாதம் செய்தார்கள். அந்த சம்பவம் ஜங்கே முகத்தஸ் (புனிதப் போர்) எனும் பெயரில் பிரசித்திப் பெற்றுள்ளது. அந்த விவாதத்தில் கிறிஸ்தவர்கள் சில குருடர்களையும், செவிடர்களையும், முடவர்களையும் அழைத்து வந்து நிறுத்தினர். இயேசு கிறிஸ்து இவர்களை எல்லாம் குணப்படுத்தி வந்தார். நீங்கள் மஸீஹுக்கு ஒப்பானவர் என்று வாதிக்கிறீர்கள். எனவே நீங்களும் இவர்களை சரியாக்கிக் காட்டுங்கள் என்றனர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எவ்வித பதற்றமும் அச்சமும் இன்றி கூறினார்கள்: இஸ்லாமிய போதனையின் அடிப்படையில் இயேசு கிறிஸ்து இப்படிப்பட்ட குருடர்கள், செவிடர்கள், முடவர்கள் ஆகியோரை குணப்படுத்தி வரவில்லை. எமது எஜமானர் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் காட்டிய அற்புதத்தை என்னால் காட்ட முடியும். மற்றபடி இந்த மாதிரியான அற்புதம் குறித்து உங்களுடைய வேதத்தில், 'கடுகளவாவது விசுவாசம் இருக்கக்கூடிய ஒவ்வொரு கிறிஸ்தவரும் இயேசு கிறிஸ்து காட்டிய அவ்வாறான அற்புதங்களை காட்ட முடியும்' என்று எழுதப்பட்டுள்ளது. இப்போது இங்கு குருடர்களும் செவிடர்களும் முடவர்களும் இருக்கிறார்கள். உங்களிடத்தில் கடுகளவாவது விசுவாசம் இருக்குமென்றால், இவர்களை சரியாக்கி காட்டுங்கள் என்று கூறினார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: அல்லாஹ் தனது நெருக்கத்தைப் பெற்றவர்களுக்கு எல்லா சந்தர்ப்பத்திலும் கண்ணியத்தை வழங்குகின்றான். மேலும் எப்படிப்பட்ட பதிலை அவர்களுக்கு புரிய வைக்கிறான் என்றால் பிறகு எதிரிகள் வாயடைத்துப் போய்விடுகின்றனர்.

ஒருவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் வந்து நான் உங்களை பெரிதும் மதிக்கின்றேன் என்று கூறினார். அத்துடன், மவ்லவிகளிடம் கொள்கைகளை ஒப்புக் கொள்ளச் செய்வதற்கு அவர் தன் அறிவைக் கொண்டு பல ஆலோசனைகளை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு வழங்கினார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அவருடைய பேச்சைக் கேட்டுவிட்டு, என்னுடைய வாதம் மனித திட்டங்களின் அடிப்படையில் இருந்திருக்கும் என்றால் சந்தேகத்திற்கிடமின்றி நான் இவ்வாறுதான் செய்திருப்பேன். ஆனால் அது இறைவனுடைய கட்டளைக்கிணங்க இருந்தது. இறைவன் எவ்வாறு புரிய வைத்தானோ அவ்வாறே நான் செய்தேன் என்று கூறினார்கள்.

*ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் உண்மைத்துவம் தொடர்பாகவும் இறைவன் சார்பாக உறுதுணையாக இருந்த உதவி ஒத்தாசை தொடர்பாகவும் ஈமானுக்கு ஒளியூட்டும் சில சம்பவங்களை எடுத்துரைத்த பிறகு ஹுஸுர் அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஒரு மேற்கோளை எடுத்து வைத்தார்கள்.* **ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** பொய்யர் அழிந்து போவதற்கு

அவருடைய பொய்யே போதுமானது. ஆனால் எந்த வேலை அல்லாஹ்வுடைய கம்பீரத்தையும் அவனுடைய தூதருடைய அருளையும் வெளிப்படுத்துவதற்கு காரணமாக இருக்கின்றதோ, அது அல்லாஹ்வுடைய கையால் நடப்பட்ட செடியாக இருக்கிறதோ பிறகு அதை மலக்குமார்கள் பாதுகாக்கிறார்கள். நினைவில் கொள்ளுங்கள்! என்னுடைய இயக்கம், அவர்கள் கூறுவதைப் போன்று வெறும் உலக வியாபாரமாக இருந்திருக்கும் என்றால், அதனுடைய பெயரும் அடையாளமும் கூட எஞ்சி இருக்காது. ஆனால் இறைவனின் சார்பாக இருக்கும் என்றால் - நிச்சயமாக அவன் சார்பாகவே இருக்கின்றது! முழு உலகமும் இதை எதிர்த்தாலும் இது முன்னேறும்; பரவும். வானவர்கள் இதை பாதுகாப்பார்கள். இன்ஷா அல்லாஹ்!

நாம் அன்னாருடைய பைஅத்தின் உரிமையை செலுத்தக் கூடியவர்களாக ஆவதற்கும் அல்லாஹ் நமக்கு நல்வாய்ப்பு வழங்குவானாக. மேலும் அன்னாருடைய தூதுச் செய்தியை உலகில் கொண்டு சேர்த்து அல்லாஹ்வின் அருள்களுக்கும் சன்மானங்களுக்கும் வாரிசாக ஆவதற்கும் அல்லாஹ் நமக்கு நல்வாய்ப்பு வழங்குவானாக. நாம் நன்றி மறப்பவர்களாக இல்லாமல், நன்றி செலுத்துபவர்களுடன் கணக்கிடப்படுவதற்கு அல்லாஹ் நல்வாய்ப்பு வழங்குவானாக!

*குத்பாவின் இறுதியில் ஹுஸூர் அவர்கள், குர்தி மொழியில் ahmadiyya-islam.org/krd எனும் வெப்சைட்டை துவக்கி வைத்து அறிவிப்பு செய்தார்கள். இந்த வெப்சைட்டின் மூலமாக குர்தி மொழி அறியக்கூடியவர்கள் ஜமாஅத்தினுடைய கொள்கைகளை முதல் முறையாக தமது மொழியிலேயே படிக்க இயலும்.*

*ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:* உலகின் நிலைகளுக்காகவும் துஆக்களை தொடருங்கள். அல்லாஹ் உலகை அழிவிலிருந்து காப்பாற்றுவானாக! மனிதர்களுக்கு அறிவை வழங்குவானாக! அவர்கள் தம்மை படைத்தவனை அடையாளம் கண்டு கொள்ளட்டுமாக.

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ

يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي

الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)**